## 14

# செல்வங்களினால் சிதைக்கப்படுதல் [5:1–6]

ஒஹியோ என்ற நகரிலிருந்து மாநில எல்லைப் பகுதியில் ஒருமனிதர் காரில் சென்றபோது, ஆயுதக் காவல் கொண்ட கார் ஒன்றின் கதவு அவருக்கு முன்பாகத் திறந்து, நெடுஞ்சாலையில் பணத்தை இறைத்ததை வாசித்தது பற்றி நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? 2 மில்லியன் டாலர்களுக்கு மேலாக நெடுஞ்சாலையில் பெருக்கெடுத்தது என்று மதிப்பிடப்பட்டது, மற்றும் இந்த ஒரு மனிதர் நின்று 150,000 டாலர்களுக்கு அதிகமான நோட்டுகளைப் பொறுக்கினார். ஒருமணி நேரம் ஆச்சரியமான மட்டற்ற கனவுகளுக்குப் பின்பு, தமது மனச்சாட்சியுடன் போராடியபின்பு, அவர் அந்தப் பணத்தை ஆர்மர்டு கார் கம்பெனிக்குத் திரும்பக் கொடுத்துவிட்டார். அந்த பதில் செயல் நாட்டையேதி கைப்படையச் செய்தது மற்றும் அது பலரால் வினோதமான, மதியீனமான செயல் என்று கருதப்பட்டது. அது உண்மையிலே மிகவும் வினோதமானதாக இருந்தது, *நேஷனல் என்கொயர்* என்ற பத்திரிக்கையின் முகப்புப் பக்கத்தில் தலைப்புச் செய்தியானது, ஜான்னி கேர்ஸன் என்பவர் இம்மனிதரைத் தமது காட்சிக்கு அழைத்து அவரது செயல்களை விளக்கப்படுத்தும்படிக் கேட்டுக்கொண்டார்.

நமது சமூகமானது, செல்வத்தின்மீதான பேரார்வம் மற்றும் பணம் செய்யக்கூடிய எல்லா விஷயங்கள் ஆகியவற்றினால் பட்சிக்கப் பட்டுள்ளது என்பது எனது சொந்தக் கருத்தாக உள்ளது. அந்த அளவு பணத்தை, அதிகம் விரைவாக மற்றும் சுலபமாக வந்த பணத்தை விட்டுக்கொடுக்கும் தனிநபரால் நாம் மனம் கவரப்படுகிறோம். நமது புத்தகசாலைகள் விரைவில் செல்வந்தர் ஆகும் திட்டங்கள் பற்றிய புத்தகங்கள் வலிந்து திணிக்கப்பட்டதாகவும், தொலைக்காட்சியானது செல்வம் மற்றும் புகழ் ஆகியவை கொண்ட வாழ்வு நடையினால் நம்மை ஈர்ப்பதாகவும் உள்ள சமூகத்தில் நாம் வாழும் காரணத்தினால் இது உண்மையாக உள்ளது. இந்த மனநிலையானது நம் எல்லாரையும் பாதிக்கிறது ஏனென்றால் நம்மில் யார், "வெளியீட்டாளர் புத்தகங்களை விற்றுத்தீர்க்கும் பரிசுக்குலுக்கலில்" கோடிக்கணக்கான ரூபாய்கள் வெற்றிபெற்றால் நமது வாழ்வு எப்படியிருக்கும் என்று பகல்கனவு காணாதவர் யார் இருக்கின்றார்?

வேதவசனத்தைக் கவனமாக வாசித்தலானது, செல்வம் ஒரு பாவமல்ல என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. உதாரணமாக, ஆபிரகாம் மிகவும் செல் வந்தரான மனிதராக இருந்தார், மற்றும் அவர் தேவனுடன் நடந்தார், முழு உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்குத் தேவனால் அவர் பயன்படுத்தப்பட்டார். உலக உடமைகளை நாம் நமது வாழ்வில் ஞானமாக, தேவனுக்கான நமது ஊழியத்தி லும் நமது சக மனிதர்களுக்கான சேவையிலும் பயன்படுத்துவதற்காகவே நம்மிடத்தில் ஒப்புவிக்கப்படுகின்றன என்று வேதவசனம் போதிக்கிறது.

நமது வேதபாடப் பகுதியான யாக்கோபு *5:1-6*ல், செல்வத்தின் அபாயகரமான பகுதியும் பணம் நமக்கு என்ன செய்யக்கூடும் என்பது நமக்குக் காண்பிக்கப் படுகின்றன. யாக்கோபு செல்வந்தர்களை நோக்கி இவற்றைக் கூறுகிறார், மற்றும் கூறுவதற்கு அவர், செல்வத்தின் பயன்பாடு மற்றும் தவறான பயன்பாடு ஆகியவற்றைப் பற்றி நேரடியான விஷயங்கள் சிலவற்றைக் கொண்டிருக்கிறார். இவர்கள் செல்வந்தரான விசுவாசிகளா இல்லையா என்பது மட்டுமே எழுகிற ஒரே ஒரு கேள்வியாக உள்ளது. இவ்வசனப்பகுதியானது யாக்கோபு பேசுவதை கேட்கிற மக்கள் கூட்டத்தை மாற்றும் இடமாக உள்ளதென்று, அவர் செல் வந்தரான புறதெய்வ வணக்கத்தாரிடம் பேசுகிறார் என்று பல எழுத்தாளர்கள் இதைக் கண்ணோக்குகின்றனர். யாக்கோபு இன்னும் விசுவாசிகளை நோக்கியே பேசிக்கொண்டிருக்கிறார் என்பது எனது உறுதியான நம்பிக்கையாக உள்ளது. நான் இவ்வாறு நம்புவது ஏன் என்பதற்குப் பலகாரணங்கள் நிலவுகின்றன. முதலாவது, செல்வந்தர் மற்றும் ஏழை பற்றிய பிரச்சனையானது யாக்கோபுவின் சிந்தனையில் பெரிதாக அச்சுறுத்தத் தோன்றியுள்ளது (1:9-11; 2:1-13; 4:13-17). அடுத்ததாக, யாக்கோபு தமது நிருபம் வாசிக்கப்படும்போது, செல்வந்தர்களான தனிநபர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பது அவர் எழுதும் வகையில் தெளிவாகிறது. கடைசியாக, செல்வந்தர்களான இந்த தனிநபர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனரா என்பது பற்றி நாம் நிச்சயமாகக் கூற இயலாவிட்டால், இந்த வெளிப்படையான குற்றப்படுத்துதல்கள் நமக்கு எதையாகிலும் கூறுவதாக நாம் எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும்?

செலவழிக்கச் செல்வங்களைக் கொண்டுள்ளவர்கள் மீது தெளிவான கண்டனத்துடன் நம்மை எதிர்கொள்வதன்மூலம் யாக்கோபு, தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்துள்ள ஆதார மூலங்கள் எதுவாக இருந்தாலும் நம் யாவருக்கும் போதிக்கிறார். பளிச்சிடும் இந்தத் தவறான பயன்பாடுகளை வெளிப்படுத்துவதினால் அவர், தேவனுடன் தாழ்மையாக நடப்பதற்கு நமது உலகப்பிரகாரமான உடைமைகளை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறார்.

## செல்வந்தர்களை மனந்திரும்பும்படி அழைத்தல் (5:1)

யாக்கோபு 5:1ல், "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்" என்று கூறும்போது, அவர் மனந்திரும்புதலுக்கான ஒரு அழைப்பை வெளியிடுகிறார். அவர், நிதிசார்ந்த வல்லமை மற்றும் உலக செல்வம் ஆகியவற்றைத் தங்கள் இருதயங்கள் மற்றும் தலைகள் ஆகியவற்றைத் திருப்பிப் போட அனுமதித்துள்ள கிறிஸ்தவர்களைக் கடிந்து கொள்கிறார்.

மனந்திரும்புதலுக்கான இந்த அழைப்பில், அவர்கள் தங்களுக்கு வரப்போகும் நிர்ப்பந்தம் பற்றி அறிந்திருந்தால் அவர்கள் "அலறி அழ" வேண்டும் என்று அவர்களுக்கு யாக்கோபு கூறுகிறார். அவர் பயன்படுத்தும் இரு வார்த்தைகள் ஆர்வத்திற்குரிய பின்னணிகளைக் கொண்டுள்ளன. "அழுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, கிறிஸ்துவை மறுதலித்த பின்பு பேதுரு மனந்திரும்பி "அழுததை" விவரிக்கப் பயன்படுத்திய அதே கிரேக்க வார்த்தையாக உள்ளது (லூக்கா 22:62). "அலறுதல்" என்பதற்கான மூல வார்த்தையானது (தனது ஒலியிலேயே தனது அர்த்தத்தைக் கொண்டுள்ள) - ஒலிக்குறிப்பு வார்த்தையாக

உள்ளது. "அலறுதல்" என்பதற்கு பதிலாக "கிறீச்சிடுதல்" என்பது இவ்வசனப் பகுதியில் மிகச்சிறந்த பயன்பாடாக இருக்கலாம். இது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளினால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு யார்மீது வந்துள்ளதோ, அவர்களின் கட்டுக்கடங்காத பயங்கரத்தை அடையாளப்படுத்தும் வகையைச் சேர்ந்ததாக உள்ளது (ஏசாயா 13:6; 14:31; 15:2, 3). "வரும் நிர்ப்பந்தங்கள்" என்பது நியாத்தீர்ப்பின் நாள் பற்றிய குறிப்பாக இருக்கும் என்பது எனக்கு தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த அழைப்பிற்குள்ளாக யாக்கோபு, ஒவ்வொரு செல்வந்தருக்குமோ அல்லது கிறிஸ்தவராக உள்ள ஒவ்வொரு செல்வந்தருக்குமோ புத்திகூறுவதில்லை. அவர் ஒரு விசேஷித்த வகையிலான மக்களைக் குறிப்பிடுகிறார். இவ்வகையான மக்களால் பண்புபடுத்தப்படும் பாவங்களை ஒவ்வொரு செல்வந்தரும் செய் திருப்பதில்லை. ஆனால் இந்தக் குழுவின் பண்புகள் முழுமையும், வேதாகம எழுத்தாளர்களைச் சிலவேளைகளில், செல்வத்தை துன்மார்க்கத்துடன் வறுமையை நற்தன்மையுடனும் வகைப்படுத்தும்படி வழிநடத்தியுள்ளது. இயேசு, "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று கூறியபோது, இதையே செய்தார் என்று காணப்படும் (மாற்கு 10:25).

## செல்வந்தர்களின் குற்றங்களைக் கண்டனம் பண்ணுதல் (5:2-6)

வரலாற்றாளர்களின் கூற்றுப்படி, வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில், செல்வம் என்பது - உண்ணுதல், உடுத்துதல் மற்றும் செலவிடுதல் என்ற - மூன்று அடிப்படை வழிகளில் காட்சிப்படுத்தப்பட்டது. 2 மற்றும் 3ம் வசனங்களில் யாக்கோபு, இவை ஒவ்வொன்றின்மீதும் கவனம் குவிப்பதாகக் காணப்படுகிறது 2ம் வசனத்தில் அவர், "உங்கள் ஐசுவரியம் அழிந்து" என்று கூறுகிறார். "அழிந்து" என்ற வார்த்தை "அழுகி" என்று நேரடி அர்த்தப்படுகிறது மற்றும் இது உணவுப் பொருட்களுக்கு விசேஷமான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்கலாம். இங்கு மறைமுகமான கருத்து பின்வருமாறு இருப்பதாகக் காணப்படுகிறது: "நீங்கள், உங்களால் பயன்படுத்த முடிவதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கொண்டிருக்கிறீர்கள், அது பயன்படுத்தப்பட முடிவதற்கு முன்னால் உண்மையிலேயே அழுகிப்போய் விடுகிறது."

யாக்கோபு, "உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின" என்று கூறுகிறார் (5:2). அவர்களின் உடைகள் சேர்த்து வைக்கப்பட்டு அந்துப் பூச்சிகளால் உண்ணப்படும் அளவுக்கு மிக ஏராளமாக இருந்தன. இது யாக்கோபு "அந்துப்பூச்சிகளுக்கு உணவு அளிப்பதால் பயன் என்ன?" என்று கேட்பது போன்று உள்ளது.

அவர் "உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது" என்று குற்றம்சாட்டுகிறார் (5:3). பொன்னும் வெள்ளியும் துருப்பிடிப்பது அல்லது அரிமானமாவது இல்லை என்று நாம் அறிந்து இருக்கிறோம்; எனவே இதன் அர்த்தம் உருவகநடையில் இருக்கிறது என்ற வகையில் நாம் இதைக் கண்ணோக்க வேண்டும். இந்தக் கடிந்துகொள்ளுதல், பொன்னும் வெள்ளியும் கையாளப்பட்ட வகையானது, அது துருப்பிடித்தது போன்று பயனற்றதாகக்

*காணப்படும்.*

*அவர்கள் செல்வத்தைக் குவித்து வைத்துப் பயன்படுத்திய விதம் பற்றி யாக்கோபு சந்தோஷம் அடையாதிருக்கிறார் என்ற தனிப்பட்ட மனப்பதிவை நீங்கள் பெறுகிறீர்கள். அவர் ''கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்'' என்று கூறும்போது (5:3) இந்தக் கருத்து மறுவலிவூட்டப்படுகிறது. அவர்கள் தங்கள் உடைமைகளை "பதுக்கி" வைத்தனர் மற்றும் இந்த "பதுக்குதல்" என்பது அழுகுதல், வீண்விரயமாகுதல் மற்றும் துருப்பிடித்தல் என்பவற்றைத் தவிர வேறு எதையும் உண்டாக்கியிருக்கவில்லை என்பதில் யாக்கோபு கலவரம் அடைந்தார். அவர்கள் தங்கள் செல்வத்தைக்கொண்டு சாதித்திருக்கக் கூடிய நல்ல விஷயங்கள் எல்லாவற்றையும் நீங்கள் கண்ணோக்கும்போது, இது மதியீன மானதாக மாத்திரமல்ல, ஆனால் பாவம் நிறைந்ததாகவும் உள்ளது!*

*யாக்கோபு மிகவும் திட்டவட்டமாகக் குறிப்பிடுபவராகிறார். அவர், 4ம் வசனத்தில் அவர்கள் தங்கள் செல்வத்தைப் பதுக்கி வைத்தது மாத்திரமின்றி, குறைந்த பட்சம் அந்த செல்வத்தின் ஒரு பகுதியாவது, அவர்களின் வேலையாட்களுக்குத் தராமல் பிடித்து வைத்திருந்த கூலிப்பணமாக இருந்தது என்று கூறுகிறார். யாக்கோபு விரைவிலேயே, பூமிக்குரிய உண்மைகளில் இருந்து அவர்களின் ஆவிக்குரிய தனிச்சிறப்பிற்கு நகர்ந்து செல்கிறார். அவர் - உணவளிக்கப்படாமல் விடப்பட்டிருந்த குடும்பங்கள் முதலியவற்றிடம் பிடிக்கப்பட்டிருந்த கூலியில் இருந்த உணர்வுப்பூர்வம் மீது தாமதிக்கச் சற்று நேரம் எடுத்து இருக்கலாம். ஆனால் யாக்கோபுக்கு, ஒரு விஷயம் மாத்திரமே கூற முக்கியமானதாக உள்ளது. என்ன நடந்துள்ளது என்பதைக் கர்த்தர் அறிந்தி ருக்கிறார்; மோசடி செயல் அவரது கவனத்தில் இருந்து தப்பித்திருக்கவில்லை. அறுவடை செய்தவர்களின் வேதனைக் குரல், சர்வவல்ல தேவனுடைய செவிகளில் சென்று சேர்ந்துள்ளது.*

*5ம் வசனத்தில், யாக்கோபு தமது மூன்றாவது குற்றச்சாட்டை வைக்கிறார்: ''பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறது போல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்.'' செல்வந்தவர்களான இந்தக் கிறிஸ்தவர்கள், ஆடம்பரத்திற்கும் சுயசீராட்டுதலுக்கும் தங்களைக் கொடுத்திருந்ததில் குற்றப்பட்டிருந்தனர். "வாழ்ந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல், "இலகுவான வாழ்வை வாழுதல்,'' ''களியாட்டு,'' அல்லது "ஆரவாரமாயிருத்தல்'' என்று அர்த்தப்படுகிறது. துன்மார்க்கத்தின் அர்த்தம் இந்த வார்த்தையின் உள்ளாக இருக்கிறது. "சம்பிரமம்" மற்றும் "சுகபோகம்" ஆகியவை ஒன்று போன்றவையாக உள்ளன என்று இவ்வசனத்தில் காணப்படுகையில், அவற்றின் அர்த்தத்தில் வேறுபாட்டின் நிழல் ஒன்று தெளிவாக உள்ளது. ''சம்பிரமம்'' என்பது ஒருவரை ஒழுக்கவீனத்திற்கு வழிநடத்தக்கூடியதான, மென்மையும் தளர்ச்சியு மான வாழ்வுப்பாணியைக் குறிக்கிறது. இதற்கு மறுபுறம், இரண்டாவது வார்த்தையானது ஊதாரித்தனமான மற்றும் வீணான சுயசீராட்டுதலை விவரிக்கிறது. இவ்வகையான வாழ்வுப்பாணி, அடிப்பதற்கென்று கொழுக்கத் செய்கிறது என்பதை நாம் அறிய வேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். அந்தச் சிந்தனை எரேமியா 12:3ன் கருத்தை நினைவூட்டுவதாக உள்ளது, அங்கு துன்மார்க்கர் ஆடுகளைப்போல் பிடுங்கிப்போடப்பட்டுக் கர்த்தரால் கொலைநாளுக்கு நியமிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மிருகங்கள்*

தங்கள் சொந்த உணவைத் தாங்களே தேடிக்கொண்டு, கடைசியில் கொலை செய்யப் படுவதற்கென்று தங்களை ஆயத்தப்படுத்துவது போன்று, விதிவச மான அந்த நாளுக்கு என்று செல்வந்தவர்கள் தங்களைத் தாங்களே கொழுக்கச் செய்கின்றனர் என்பது இவ்விடத்தில் உள்ள வேறுபாடாகும்.

6ம் வசனத்தில் யாக்கோபு, எல்லாவற்றிலும் மிகவும் தீவிரமான குற்றச்சாட்டை முன்வைக்கிறார்: "நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை." எனது கருத்தில் NIV வேதாகமம், யாககோபுவின் குற்றச்சாட்டினுடைய வெளிப்படையான தன்மையைத் தவறவிடுகிறது. அவர்கள், குற்றம் அறியாத நீதிமான்களைத் தாக்கியதால் குற்றப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் பாதுகாப்பு இல்லாத மற்றும் திரும்பிப் போராட மறுத்தவர்களைத் தாக்கியதால் குற்றப்பட்டிருந்தனர். அவர்களின் நடக்கையில், இரக்க உணர்வு, அன்பு அல்லது தேவபக்தி ஆகியன இல்லாது போகுமளவுக்கு, பணத்திற்கான அவர்களின் பெருவிருப்பம் மூழ்கடிப்பதாக இருந்தது. அவர்களின் பேராசையானது, எஸ்ரயேலனான நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை அபகரித்துக்கொள்ளும்படி அவரைக் கொலை செய்த ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரின் பேராசையின் எல்லை மீறல்களை அடைந்திருந்தது (1 இராஜாக்கள் 21).

## தேவனுடைய அக்கறையைக் கைப்பற்றுதல்

உண்மையில் செல்வத்தைப் பற்றியல்ல ஆனால் செல்வத்தைக் குறித்துத் தேவனுடைய மக்களின் எண்ணப்போக்கு குறித்தே தேவனுடைய அக்கறை உள்ளது. பணம் மற்றும் உடைமைகளை மற்றவர்களின் வாழ்வை ஆசீர்வதிக்கப் பயன்படுத்தும் விருப்பம் இன்றி, அவற்றைச் சேர்த்துக்குவிப்பதில் நமது அக்கறை உள்ளது என்றால், நாம் படகைத் தவற விட்டிருக்கிறோம் என்று யாக்கோபு கூறுகிறார். 2 மற்றும் 3ம் வசனங்களில் "சேர்த்துவைத்தல்" என்ற விஷயத்தைப் பற்றிய கடிந்து கொள்ளுதலுக்குப் பின்னால் இந்த அக்கறை உள்ளது. கிறிஸ்தவர்களுக்கு தேவன் கொடுத்துள்ளவற்றை, மற்றவர்கள் வாழ்வை ஆசீர்வதிப்பதற்காக அவர்கள் பயன்படுத்த வேண்டும். அதனால்தான் ரோமர் 12ன் "ஊழியக் கொடைகளில்" நமக்கு, "பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்" என்று கூறப்படுகிறது.

தேவனுடைய போதனை, செல்வந்தவர்களாக இருப்பவர்களுக்கு எதிராக அல்ல, ஆனால் செல்வத்துடன் அடிக்கடி வருகிற தவறான முன்னுரிமைக்கு எதிராகவே உள்ளது. இந்த முன்னுரிமைகள் மற்றும் இவை எவ்வாறு தவறாக ஒன்று கலக்கப்படுகின்றன என்பவை இவ்வசனப் பகுதியில் மிகவும் கவனிக்கத் தக்கவைகளாக நிற்கின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள், செல்வம் சேகரிப்பதற்காக மோசடி*யும்* கொலை*யும்* செய்ய மனவிருப்பமாக இருந்தனர். சேர்த்துக் குவிக்கப்பட்ட தங்கள் செல்வத்தைப் பயன்படுத்துவதில், அவர்கள் ஒழுக்கவீன மாக இருக்கும் இடம் வரைக்கும் தங்களையே சீராட்டிக் கொண்டிருந்தனர்.

## முடிவுரை

நாம் செல்வந்தவராகவோ அல்லது ஏழையாகவோ, எப்படியிருப்பினும் நாம் கொண்டுள்ள ஒவ்வொன்றையும் நமக்குத் தருகிறவர்மீது நமது நம்பிக்கையை நிலைநிறுத்துவது அவசியம். செல்வமும் மற்றும் சகல ஆடம்பரங்களும், தேவன்

*நமது வாழ்வில் செய்யக்கூடிய செயல்களுக்குப் பதிலியாக இருப்பதில்லை. இயேசுவின் வார்த்தைகள் இன்னமும் உண்மையானவைகளாகவே ஒலிக்கின்றன: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன்ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26).*